முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருநாளைப்போவார் (நந்தனார்) அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

20.12.2018, வியாழக்கிழமை

1. **கருணை வடிவின் சக்தியாக வந்த**
**கருணா மூர்த்தி அரங்கராசா**
**பெருமைபட அரங்கன் நாமசெபம்**
**பிசகில்லா செய்து வரும் மக்கள்**

2. மக்களெல்லாம் மரணம் வெல்வர்
மறுமை காணா மீள்வரென
தக்கதொரு அரங்கன் பெருமை கூறி
தரணியிலே ஒளி சூட்சும நூலை

3. நூலை **விளம்பி சிலை திங்கள்**
**நிலமதனில் பஞ்ச திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 5ம் நாள் 20.12.2018, வியாழக்கிழமை)**
**ஞாலமதில் திருநாளைப்போவார் யானும்**
**நாட்டிடுவேன் உலகோர் நலம் பெற**

4. நலம் தரும் ஞானிகளின் ஆட்சி
ஞானயுக மாற்றமாக நிகழவிருக்க
பலம் கூட்ட உலக தொண்டர்களே
பணிந்து அரங்கன் சபைக்கு வாரீர்

5. வாரீர் தானதருமம் பெருக்கி
வளர்த்திட வல்லமை கூட்டிட
தாரீர் சரணடைவு தன்னை
தருமம் பெருகும் வழியில் தான்

6. தன்னிலே மக்களின் மனநிலை
தயவு கொண்ட சக்தியாக மாறி
மண்ணுலகே மாற்றம் பெறும்
மக்களிடை முருகன் சக்தி அருளை

7. அருளை ஆசியாக அருளி
அறமாக்கி அருளமுது தந்து
இருள் எனும் அறியாமை போக்கி
இணையிலா ஞானம் வளர்க்கும்

8. வளர்க்கும் அரங்கனே தலைவன்
வள்ளலாரின் சூட்சும ஞானி
தளர்விலா உயிர்காக்கும் ஞான
தவசி ஆறுமுகனாரின் ஒளி சூட்சுமம்

9. சூட்சுமம் மிகுந்த அரங்கன்
சொல்லும் சுத்த சைவ நெறியே
மாட்சிமைபட உலகை வெல்லும்
மாதவத்தின் பெரும் வரமாகும்

10. வரமென தீட்சையாக வந்து
வணங்கி ஏற்கும் மக்களே
தரணியில் பெரும் பதவிக்கு
தகுதிபெற்று சிறப்பு காண்பர்

11. காண்கவே தகுதி பெற்றவரெல்லாம்
கலி இடரை வென்று தேறுவர்
உண்மை ஆன்மீகம் படைத்து
உலகத்தில் பிறவா கதி பெறுவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருநாளைப்போவார் (நந்தனார்) அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கருணையே வடிவாக கருணையின் சக்தியாக வந்துதித்த கருணாமூர்த்தியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே பெருமைமிக்க அரங்கமகாதேசிகனாரின் நாமஜெபங்களை தவறாமல் செய்து வருகின்ற மக்களெல்லாம் மரணத்தை வெல்லும் வாய்ப்பினை பெறுவார்கள், மறுபிறப்பை அடையாது பிறவிகள் இல்லாத பெருநிலையை அடைவார்கள் என அரங்கா உமது புகழை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 5ம் நாள் 20.12.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருநாளைப்போவார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருநாளைப்போவார் எனும் மகான் நந்தனார்.

எல்லா நலங்களையும் தந்தருளும் ஞானிகளின் ஆட்சியானது இவ்வுலகினில் ஞானயுக மாற்றமாக நிகழவிருக்க உலகின் தர்மபலம் கூட்டிட உலக தொண்டர்களே உடன் விரைந்து பணிந்து வாரீர் வாரீர் அரங்கமகா தேசிகனார் வாழும் ஞானசபை துறையூர் ஓங்காரக்குடிலிற்கு, வாருங்கள் தொண்டர்களே உலகின் தானதருமம் பெருக்கி தர்மம் வளர்த்திட வல்லமைகள் கூட்டிட, தாரீர் தாரீர் அரங்கன் திருவடிகளிலே சரணடைவை, அரங்கன் திருவடிகளிலே சரணடைந்துமே தொண்டுகளை செய்து வாருங்கள்.

தருமத்தினை பெருக்கிட தருமம் பெருகும் வழியினால்தான், மக்களின் மனோநிலை தயவு கொண்ட மகா சக்தியாக மாறி இந்த உலகமே மாற்றம் அடையுமப்பா.

மக்களுக்கு முருகப்பெருமானின் சக்தியை அருளினை ஆசிகளாக மக்களுக்கு அருளி முருகப்பெருமானின் சக்தியை அறமாக ஆக்கி மக்களுக்கு அருளமுதாம் உணவினை தந்து இருள் என்கிற அறியாமையை போக்கி ஈடுஇணையில்லாத வகையிலே ஞானத்தினை வளர்க்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனே ஞானத்தின் தலைவன் வள்ளல் பெருமானின் சூட்சும ஞானி ஆவார்.

தளர்ச்சியற்ற வகையிலே தளராது உயிர்களை காக்கின்ற ஞானதவசி முருகப்பெருமானாரின் ஒளி சூட்சுமம் மிகுந்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் சுத்தசைவ நெறியாகிய கொல்லாமையை கடைப்பிடித்து சுத்தசைவநெறியில் உலக மக்கள் வந்திட்டால்தான் உலகம் மாறும். சுத்த சைவ நெறியே உலகைக் காக்கும் உலகையும் வெல்லும், மாதவங்களுக்கு கிடைக்கும் மிகப்பெரும் வரமாகும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து தீட்சை உபதேசம் அடைவதை வரமாகப் பெற்று தீட்சை உபதேசம் அடைந்து அரங்கனை பயபக்தியுடன் வணங்கி ஏற்று அவரவரும் அவரவரின் வாழ்வினிலே கடைப்பிடித்திட தீட்சை ஏற்று தூயநெறியை கடைப்பிடிக்கும் மக்களே பெரும் பதவிக்கு தகுதி பெற்று சிறப்புகளை காண்பார்கள். தகுதி பெற்றவர்களே கலியுகத்தின் இடர்களையெல்லாம் வென்று கடைத்தேறுவர். உண்மை ஆன்மீகத்தினை உலகினின் பரப்பி உலகினில் உண்மை ஆன்மீகத்தை நிலைநிறுத்தி உலகினில் பிறவாநிலை எனும் பெருநிலையை பெற்று சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் திருநாளைப்போவார் என்கிற மகான் நந்தனார்.

–சுபம்–